செ.வெ.எண்: 45 நாள்: 28.12.2016

## பத்திரிகைச்செய்தி

## நலிந்த நிலையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதிய மான்ய உதவித்தொகை-2016

விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க சிறப்பு சாதனை புரிந்து (பன்னாட்டு/தேசிய அளவில்) தற்பொழுது வருமானம் இன்றி சிரமப்படும், தமிழகத்தில் வாழும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய மான்ய உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தகுதிகள்: குறைந்த பட்ச தகுதிகள்: அ) தேசிய அளவு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக பங்கேற்பு, ஆ) தேசிய அளவிலான போட்டிகளில் முதலிடம் / இரண்டாமிடம் / மூன்றாமிடம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், இ) பள்ளி / கல்லூரி காலங்களில் சாதனை படைத்தவர்கள் மட்டுமே தகுதிபெறுவர். அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கங்களினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டிருத்தல் வேண்டும். முதியோருக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை. 2016 ஏப்ரல் முதல் தேதியன்று 58 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் மாத வருமானம் ரூ.6000/-க்கு (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) மிகாமல் இருத்தல் வேண்டும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட, விளையாட்டுச் சான்றிதழ் நகல்கள், வருமானச் சான்று நகல், வயது குறித்த சான்று நகல் ஆகியவை கண்டிப்பாக இணைக்கப்படல் வேண்டும். 5.மத்திய அரசின் விளையாட்டு வீரருக்கான ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் மத்திய / மாநில அரசின் கீழ் ஓய்வூதியம் பெறுவோர் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதி இல்லை. ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்தை, எச்சூழ்நிலையிலோ, அடிப்படையிலோ, நிராகரிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு உரிமை உண்டு.

விண்ணப்பங்கள் அனைத்து மாவட்ட விளையாட்டுப் பிரிவு அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பக் கட்டணமாக ரூ.10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புவதற்கான கடைசி தேதி 31.01.2017. 31.01.2017-ந்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முகவரி: மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டரங்கம், ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை-622003, தொலைபேசி எண் : 222187.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**